

# ஏனோக்கு மரணத்தை ருசிபாராமல்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# ஏனோக்கு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி:
# 61-10-01M எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது

***125.*** *ஒவ்வொரு கிறிஸ்தவனும் வார்த்தையில் நிற்பது அவனுக்கு ஏற்றதாயிருக்கிறது. முற்றிலும் உண்மை. தேவனுடைய வார்த்தையில் நில்லுங்கள்! வானமும் பூமியும் ஒழிந்து போம், நீங்கள் ஒழிந்து போவீர்கள், நான் ஒழிந்து போவேன், சபைகள் ஒழிந்து போம், ஸ்தாபனங்கள் ஒழிந்துபோம், ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஒருக்காலும் ஒழிந்து போகாது! விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள். விசுவாசமுள்ள யாத்திரீகர்களாய்!*

***126.*** *ஏனோக்கின் காலத்தில், ஜலப்பிரளயத்துக்கு சற்று முன்பு, ஏனோக்கு வெளியே*

எட்டி பார்த்து நோவா பேழையை உண் டாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். ஏனோக்கு ஒரு தீர்க்கதரிசி. ஏனோக்கு, தான் ஒரு முன்னடையாளமாக இருப்பதை அறிந் திருந்தான். ஜலப்பிரளயம் உண்டாவதற்கு முன்பு அவன் ஒரு உதாரணத்தை அளிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தான். எனவே ஒரு பிற்பகலில் அவன் நடந்து செல்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. அவன் தேவ னுடன் இந்த நடையை மேற்கொள்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. எப்படியோ, அந்த குறிப்பிட்ட நாளில் அவன் வழக்கமாக செல்லும் வழியை மாற்றிக் கொண்டான். அவன் மலையின் அடிவாரத்தில் நடந்து செல்வதற்குப் பதிலாக ராஜாவின் பெரும் பாதையை தெரிந்து கொண்டு அதில் நடந்து கொண்டேயிருந்தான். “அவனை அவர்கள் காணவில்லை, ஏனெனில் அவன் காணப் படாமற் போனான்” அவன் ராஜாவின் பெரும்பாதையில் நடந்து மேலே சென்றான்.

*127.* ஓ தேவனே, நானும் ஏனோக்கைப் போல் இருப்பேனாக! பாதையில் நான் நடந்து செல்ல வேண்டிய நேரம் வரும் போது, ராஜாவின் பெரும்பாதையைக் கண்டு கொள்வேனாக!

*128.* நான் ஏனோக்கைக் காணமுடிகிறது. அது அவனுக்கு ஏற்றதாயிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். ஏனெனில் அவன் ஒரு தீர்க்கதரிசி. என்ன நடக்கப் போகிற தென்று அவன் அறிந்திருந்தான். எனவே அவன் மனைவியை முத்தம் செய்து விடை பெற்று, "உன்னை நான் பிறகு காண்கிறேன்" என்று கூறுவதை என்னால் காணமுடிகிறது. அவன் தன் பிள்ளைகளை கையிலெடுத்து முத்தமிட்டு விடைபெற்றான்; விவாகமான தன் மகனிடமும், விவாகமான தன் மகளிட மும் சென்று அவர்களையும் முத்தமிட்டு விடைபெற்றான்.

***129.*** *அவர்கள், "அப்பா எங்கே போகிறீர்கள்? உலாவி வருவதற்கா?" என்று கேட்டார்கள்.*

*அவன், "ஆம், சிறிது உலாவி வரச் செல்கிறேன்" என்றான்.*

***130.*** *ஆனால் அன்று அவன் வழக்கமாக செல்லும் வழியில் செல்லவில்லை. அவன் ராஜாவின் பெரும்பாதையில் நடந்து மகிமையை அடைந்தான். அப்படி செய்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. அவனுக்கு இவ்விடம் விட்டுச் செல்ல பிரியமில்லை. இருப்பினும் எல்லா நீதியையும் நிறைவேற்றுவது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. ஏனெனில் அவன் இன்றைய சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறான். நாம் ராஜாவின் பெரும் பாதையில் நடந்து இங்கிருந்து போய்விடுவோம்.*

***131.*** *ஆம், எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நோவாவுக்கு ஏற்றதாயிருந்தது, ஏனோக்குக்கு ஏற்றதாயிருந்தது.*



அவன் ஒரு அடி சற்று உயரமாக எடுத்து வைக்கையில், அடுத்த அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், மற்றொரு அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், முதல் காரியம் என்னவெனில், "உலகமே, உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்" என்று கூறினான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-01-01, இருபத்து நான்கு மூப்பர்கள்

*63.* "*நோவாவின் நாட்களில் நடந்தது போல்,*" *புத்தி கூர்மையுடைய மனிதன், அணுசக்தி வல்லமையை உடைய புத்திசாலி யான மனிதன், அன்றைக்கு இருந்தான்.*

*அவனால் பிரமிடுகளையும், ஸ்ஃபிங்ஸ் களையும் கட்டியெழுப்ப முடிந்தது.*

"*அந்த நாட்களில் நடந்தது போலவே இந்நாட்களிலும் இருக்கும்*" *ஆனால் இந் நாளில் அவருடைய கிரியை உரிய வேளைக்கு முன்பாகவே விரைந்து முடிக்கப் படும்.*

ஏனெனில் எடுத்துக் கொள்ளப்படுதலில் வெளியே எடுக்கப்பட வேண்டியவர்கள் அங்கே இருக்கிறார்கள்.

ஏனோக்கைப் போல் தீங்கு நாட்களுக்கு முன்பாகவே எடுக்கப்பட வேண்டிய மக்கள் உள்ளனர்.

இக்காலையில் நாமே அந்த வகுப்பாராக இருக்கிறோம்.

ஜலப்பிரளயத்தினூடே நோவா மேலே கொண்டு செல்லப்பட்டது போலவே, நாமும் மேலே கொண்டு செல்லப்படுவோம்.

**64.** இதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

ஒரு துளி மழை விழும் முன்னர், ஆகாயத்தில் ஒரு துளி இருப்பதற்கு முன்பு, நோவா பேழையை செய்து முடிப்பதற்கு முன்னர், ஏனோக்கு பரம வீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

ஏனோக்கு மரணத்தை ருசிபாராமல் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டான்.

ஒருநாள் அவன் நடக்க ஆரம்பித்து, இறுதியில், பூமியின் புவி ஈர்ப்பு விசையானது அவன் மேல் உள்ள பிடியை நழுவவிட்டு விட்டது.

அவன் ஒரு அடி சற்று உயரமாக எடுத்து வைக்கையில், அடுத்த அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், மற்றொரு அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், முதல் காரியம் என்னவெனில், "உலகமே, உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்" என்று கூறினான்.

அவன் மேலே மேலே நடந்து சென்று மகிமைக்குள் பிரவேசித்து விட்டான்.



# நீங்கள் அவ்விதம் விசுவாசிக்காவிடில், நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தில் ஏதோ தவறுண்டு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: மூன்றாம் முத்திரை, மார்ச் 26, 1963 மாலை

*71.* எடுக்கப்படுதலில் ஒருவன் மாத்திரம் செல்வானேயாகில், அது நானாயிருக்க வேண் டும். ஆமென், பாருங்கள். ஏனெனில் நான் அவர் மீது விசுவாசம் கொண்டிருக்கிறேன் "அது நான்தான்". இவ்விதமே நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். நிச்சயமாக.

'நான் அவரிடம் நெருங்கி ஜீவிக்க விரும்புகிறேன் அப்படியானால் அவர் வரும் போது என்னைக் கொண்டு செல்வாரென்று நான் அறிந்திருக்கிறேன். நான் அதை விசுவா சிக்கிறேன். அது உண்மை. மற்றவர் அதில் செல்லத்தவறினாலும், அவருடைய கிருபை யால் நான் அங்கிருப்பேன். ஏனெனில் அவர் எனக்கு அவ்விதம் வாக்களித்துள்ளார். நான் அங்கிருப்பேன் என்று அறிந்திருக்கிறேன்.

அவர் ஒருபோதும் பொய்யுரையார். நான் தினந்தோறும் அவர் இன்று வருவாரென்று கருதி அவருக்குகந்த விதத்தில் ஜீவிக்கிறேன் என்பதை என் ஆத்துமாவும் ஜீவனும் சாட்சி கொடுக்கின்றன. ஆகவே எடுக்கப்படுதலில் நான் நிச்சயமாக இருப்பேன். எட்டு பேர் எடுக்கப்பட்டால், நான் எட்டுப்பேரில் ஒருவ னாயிருப்பேன். ஐந்நூறு பேர் எடுக்கப்பட் டால் நான் ஐந்நூறு பேரில் ஒருவனாக இருப்பேன்' என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். "மற்ற நபரைப் பற்றி நான் அறியேன், ஆனால் நான் அந்த ஐந்நூறு பேரில் ஒருவனாக இருக்க விரும்புகிறேன்," பாருங்கள்? நீங்கள் அவ்விதம்தான் ஞாபகங் கொள்ள வேண்டியவராய் இருக்கிறீர்கள். பாருங்கள்?

**72.** நீங்கள் அவ்விதம் விசுவாசிக்கா விடில், நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத் தில் ஏதோ தவறுண்டு. பாருங்கள்? அவ்வா றாயின் இரட்சிக்கப்பட்டதன் நிச்சயம் உங்க

ளுக்கு ஏற்படவில்லை. இரட்சிக்கப்பட்டதாக நீங்கள் ஊகித்துக்கொள்கின்றீர்கள். அவ்விதம் செய்ய வேண்டாம். சரி.




செய்தி: எபிரெயர், நான்காம் அதிகாரம், பத்தி எண் 60

அப்பொழுது தேவன்,
“அவர்கள் சந்தேகப்பட்ட
காரணத்தால்,
அது பாவமாயிற்று” என்றார்.
எந்தக் காரியத்தையும்
சந்தேகப்படாதீர்கள்.
விசுவாசியுங்கள்.
சந்தேகப்படாதீர்கள்,
அது எவ்வளவு கடினமான
காரியமாயிருந்தாலும்
கவலைப்படாமல்
அதை விசுவாசியுங்கள்.



# தேவனுடைய கிருபையினால் நாம் கைவிடப்படுவதில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0901E பதறல்

நாமும் கூட ஏதோ ஒன்று நிகழப் போகின்றது என்று அறிந்திருக்கிறோம். கர்த்தருடைய வருகை சடுதியாக இருக்கு மென்று (மணவாட்டி) இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவாள் என்றும் ஞாபகமிருக்கட்டும். அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார். நமது குடும்பத்தின் அங்கத்தினர் திடீரென்று சென்றுவிட்டனர்; நாம் கைவிடப்பட்டோம் என்று நினைக்கும்போது! அது நம்மை பதறச் செய்ய வேண்டும். தேவனுடைய கிருபையினால் நாம் கைவிடப்படுவதில்லை. ஆண்டவரே, எனக்கு விருப்பமில்லாதது ஏதாவது ஒன்றிருக்குமாயின், அது கைவிடப்படுதலே யாகும். என்னைக் கைவிடாதேயும், ஆண்டவரே.

# ஏனோக்கு மரணத்தை ருசிபாராமல்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து